தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புதன் கிழமை, 1984 மார்ச் 14.

பங்குனி 1, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தில் பணம் கையாடல்.

*89. வினா—திரு. ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு சுற்றுலா வாரியத்தில் 1981 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் லட்சக்கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) மற்றும் (இ) தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தலைமை கணக்கு அலுவலர் மற்றும் செயலாளராகப் பணியாற்றிய திரு. பி. ராம்ஜீ மீது குவிந்த கால வைப்பு நிதியிலிருந்து 1980-81-ல் ரூபாய் 1,00 இலட்சம் கையாடல் செய்ததற்காகவும், கணக்குகளைப் பொய்யாக வைத்ததற்கும், குற்றம் சாட்டப்பட்டு காவல் துறையினரால் 6—2—1982-ல் சென்னை நகர் குற்றவியல் இணை நீதிபதி, நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

ரூ. 1,16,350 மதிப்புள்ள சுற்றுலாப் பயணச் சீட்டுகள் விற்ற தொகையை 23—8—1983 முதல் 1—9—1983 வரை வங்கியில் வைப்புக் தொகையாகச் செலுத்தவில்லை. இது சம்பந்தமாக வி. ஜானகிராமன், ஆர். சந்தோஷ் குமார் என்ற மேற்பார்வையாளர்கள், ஏ. கோவிந்தன் என்ற இளநிலை உதவியாளர் ஆகியவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.